
# தீபாவளித் திருநாள் வாழ்த்து!



தீபவொளித் திருநாள் என்றேத்
திகழ்ந்ததோ தமிழர் வாழ்வில்!
பாபமாம் இருளைப் போக்கும்,
அறிவசால் ஈசன் அருளால்!
தீபமாய்த் திகழ்ந்த நாளும்,
தீபாவளியாகிப் புத்தாடையோடு,
கோபக்கனலாய் அசுரனை யந்தக்
கோபாலன் அழித்ததாய்க் கொண்டே!



நேசமாய் ஈசன் நாளை,
நெடிதந்தக் கார்த்திகைத் திங்கள்
பாசமாய் முருகன் தன்னை,
பக்குவமாய் மனத்லேற்றிச் சீலமாய்,
ஈசனுக்குச் சொக்கப் பணையொடு,
கார்த்திகை தீபமாய் அரங்கமேற,
வேசமோ தமிழன் அறிவென்று,
வியனுலகம் பேசிக் கொள்ளும்!



காசினியில் தமிழன் அறிவும்
கலங்கமாய் மாறிப் போக,
வீசியசீர் அறிவின் கொற்றம்,
விணாகிப் போனதுவோ காண்!
பேசும் மொழியைக் கூறியவாறு,
பெயர்களை அறிவுடன் படைத்தும்,
நீசமாயின்று நிகழ்த்தல் மாறி,
நிகழ்த்தியப் பெருமை காத்திடுவோம்!



**அனைவருக்கும் இனிய தீபாவளித் திருநாள் வாழ்த்துக்கள்!**

அன்புடன், கவிஞர் **கவ்வளவன்** — **14-11-2020**